செ.வெ.எண்: 61/2017 நாள்: 24.01.2017

**தமிழக அரசின் சிறப்பு மருத்துவ முகாம்**
**தேவிகோடு, அரசு நடுநிலைப்பள்ளியில் (28.01.2017) அன்று நடைபெறவுள்ளது.**
**கிள்ளியூர், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் வட்டார மருத்துவ அலுவலர்**
**மரு. எம்.ரமாமாலினி அவர்கள் தகவல்.**

தமிழக அரசின் சிறப்பு மருத்துவ முகாம் (28.01.2017) சனிக்கிழமை அன்று காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை கிள்ளியூர் வட்டம், கீழ்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட ஆலஞ்சி துணைசுகாதார நிலைய பகுதியான தேவிகோடு, அரசு நடுநிலைப்பள்ளியில் வைத்து நடைபெற உள்ளது.

இச்சிறப்பு முகாமில் கண், காது, மூக்கு, தொண்டை, பல் மருத்துவம், வயிறு சம்பந்நப்பட்ட நோய்கள், காசநோய் பரிசோதனை, இருதய நோய் பரிசோதனைகளும், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலமருத்துவம், எலும்பு சிகிட்சை, தோல் நோய், மனநல மருத்துவம், சித்த மருத்துவம், தொற்றாநோய் (NCD) மருத்துவம் ஆகியவற்றிற்கு சிறப்பு மருத்துவர்களால் நோய் கண்டறியப்பட்டு, அதற்குரிய சிகிட்சைகள் வழங்கப்படும்.

சிறப்பு முகாமில் ஆய்வகப்பரிசோதனைப் பிரிவில் இரத்தம், சிறுநீர் மற்றும் சளி பரிசோதனைகளும், இரத்தத்தில் சர்க்கரை மற்றும் கொழுப்பு அளவு பரிசோதனைகளும், தேவைப்படுவோர்களுக்கு இசிஜி, ஸ்கேன் பரிசோதனைகளும் இலவசமாக செய்யப்படும்.

மேலும் தமிழக முதல்வர் அவர்களின் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனை மருத்துவர்களும் இந்த முகாமில் கலந்து கொண்டு சிகிட்சை வழங்க உள்ளார்கள்.

எனவே பொதுமக்கள் இந்த இலவச முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கிள்ளியூர், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் வட்டார மருத்துவ அலுவலர் மரு. எம்.ராமாமாலினி அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்